பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 06 வியாழக்கிழமை 21.11.2024 கதிர் 014

## இது ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க இன்று இந்தியாவுக்குச் செல்கிறார். அங்கு மத்திய பிரதேச ☞ 2

### தமிழ் மக்களை நடுத் தெருவில் விட்டுவிடாதீர்கள்

# ஒற்றையாட்சித் தீர்வை ஏற்று இந்தியா தவறிழைக்கக்கூடாது

### உயர் ஆணையரிடம் முன்னணி வலியுறுத்து

அநுர தலைமையிலான ஆளும்தரப்பின் ஒற்றையாட்சியை மையப்படுத்திய அரசமைப்பை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களை நடுத்தெரிவில் விடுகின்ற செயற்பாட்டிற்கு துணைபோய் வரலாற்றுத் தவறை இழைத்துவிடக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளார் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார்.

சமகால மற்றும் எதிர்கால அரசியல், பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான கலந்துரையாடலொன்று இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜாவுக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் நேற்று கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார், மற்றும் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது:

இந்திய உயர்ஆணையரின் அழைப்பின்பேரில் நானும், எமது கட்சியின் பொதுச்செயலாளரும் சந்திப்பில் பங்கேற்றிருந்தோம். ☞ 2

## சந்தேகத்தில் மனைவியை எரித்தே கொன்ற கணவன்

### புத்தளத்தில் கொடூரம்

மனைவியின் உடலில் மண்ணெண்ணெய்யை ஊற்றி தீ வைத்து எரித்துக் கொன்ற கணவனும் அந்தத் தீயினால் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். எரிக்கப்பட்ட மனைவி உயிரிழந்துவிட்டார். ☞ 2

## முல்லைத்தீவு விபத்தில் 2 இளைஞர்கள் இறப்பு



முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி, வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் 2 இளைஞர்கள் உயிரிழந்தனர். ☞ 8



## தாய், சேய் உயிரிழப்புகளுக்கு நீதி கேட்டு மறியல் போராட்டம்

### மன்னார் வைத்தியசாலை முன்பாக நேற்று மாலை பதற்றம்

மன்னார் பொது வைத்தியசாலையில் மகப்பேற்றின்போது தாய் மற்றும் சிசு உயிரிழந்தமைக்கு நீதிகேட்டு மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக உறவினர்கள், பொதுமக்களால் நேற்று சுமார் 5 மணி நேரம் போராட்டம் நடத்தப்பட்டது. அதிகாரிகளின் தலையீட்டை அடுத்து இரவு 8 மணியளவில் போராட்டம் முடிவுக்கு வந்தது. இதற்கிடையில் இந்த உயிரிழப்புக்கள் குறித்து மத்திய சுகாதார அமைச்சு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது என்று புதிய அமைச்சர் நாளிந்த ஜயதிஸ்ஸ அறிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வைத்தியசாலைக்குள் நுழைய முற்பட்டதாலும் பொலிஸாருடன் முறுகல் நிலை ஏற்பட்டு வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டதாலும் வைத்தியசாலையின் முன்பாகச் சில மணி நேரம் பதற்றம் ஏற்பட்டது. போக்குவரத்தும் தடைப்பட்டது.

தாய், சேய் உயிரிழப்புக்களுக்கு நீதிகோரியவர்கள் வைத்தியசாலைக்கு முன்பாக மாலை 4.30 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டத்தைத் தொடங்கினர். நடந்த உயிரிழப்புக்களுக்கு ☞ 2

## தேசிய பாதுகாப்பு முக்கியமானதாம்

இராணுவ முகாம்களை விடுவிப்பதில் வட மாகாணமாக இருந்தாலும் தென் மாகாணமாக இருந்தாலும் தேசிய பாதுகாப்பு பேணப்படுவது மிகவும் முக்கியமானது என நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவ முகாமொன்று விடுவிக்கப்பட்டமை குறித்து நேற்று தனது எக்ஸ் பக்கத்தில் இட்ட பதிவொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கில் இராணுவ முகாம் ஒன்று விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களுக்கு காணிகளை வழங்குவதற்காக இன்னும் பல இராணுவ முகாம்கள் எதிர்வரும் மாதங்களில் விடுவிக்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு தரப்பினருடன் கலந்தாலோசித்து காணிகளை விடுவிப்பது பிரச்சினையல்ல என்றாலும், தேசிய ☞ 2

## ஹரீன் குற்றச்சாட்டு

தேர்தல் சட்டங்கள் தொடர்பில் இரண்டு வகையான அணுகுமுறைகள் பின்பற்றப்படுவதாக முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ குற்றம்சாட்டியுள்ளார். தேர்தல்சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

2024 பொதுத்தேர்தலின் போது தேர்தல்சட்டங்களை மீறிப் பரப்புரையில் ஈடுபட்ட தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களிற்கு எதிராக ஏன் சட்டநடவடிக்கைகளை எடுக்கவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பதுளைப் பொலிஸாரிடம் வாக்குமூலம் ☞ 2

## கஞ்சிப்பானை இம்ரானின் சகாவால் பருத்தித்துறையில் பாதுகாப்பு தீவிரம்

பருத்தித்துறை நகர் மற்றும் பருத்தித்துறை நீதிமன்றவளாகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று பகல் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

பிரபல பாதாளஉலகத்தலைவன் கஞ்சிப்பானை இம்ரானின் சகாவான தமிழ் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ☞ 8

## மின்சக்தி அமைச்சு செயலர்கள் நீதிமன்றில் மன்னிப்பு கோரினர்

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால மற்றும் அமைச்சின் மேலதிக செயலாளர் சி.ஏ.சுனெத் லோச்சன ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் நிபந்தனையின்றி நேற்று மன்னிப்பு கோரியுள்ளனர்.

மின்சக்தி-எரிசக்தி அமைச்சுக்கு சொந்தமான இலங்கை ட்ரான்ஸ்ஃபோமர்ஸ் லிமிட்டட் நிறுவனம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றபோது, கணக்காய்விற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துமாறு தெரிவித்து குறித்த நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பியதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பிலேயே அவர்கள் மன்னிப்பு கோரியுள்ளனர்.

இந்தச் சம்பவம் மூலம் நீதிமன்றத்திற்கு அவதூறு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஏற்கனவே நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்த அறிவித்தலுக்கு அமைய நீதிமன்றத்தில் தனிப்பட்ட ரீதியில் ஆஜராகி குறித்த இருவரும் மன்னிப்புக் கோரினர்.

குறித்த கடிதத்தை அனுப்பிவைத்ததில் ☞ 8

## 70 ஆயிரம் தொன் அரிசி இறக்குமதி

### அமைச்சர் அறிவிப்பு

அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக தற்காலிகமாக 70,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக, வர்த்தக, வாணிபம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில், அரிசித் தட்டுப்பாடு தொடர்பில் உடனடித் தீர்வு காணப்பட வேண்டுமெனும் முடிவு எடுக்கப்பட்டது. ☞ 8

## 'பார் லைசென்ஸ்' பிரச்சினை நீதிமன்றம் வரை சென்றது

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர், மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கண்டியில் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

மாநிலத்தின் இன்தூரில் ஸ்ரீ சத்திய சாய் பாபாவின் உயர் கல்வி நிறுவனத்தில் விசேட உரையாற்றவுள்ளார். நாளைவெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு அவரது விசேட உரை இடம்பெறவுள்ளது.

இந்தியாவில் இருந்து ரணில் நவம்பர் 30 நாடு திரும்புவார். அவர் திரும்பி வந்ததும் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைச் சந்தித்துப் பேசுவார். அவர் இந்தியா புறப்படுவதற்கு முன்பாகவே சுமந்திரனுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தார். தேர்தலில் பின்னடைவுகள் வரும், அவை பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளக்கூடாது என்று சுமந்திரனுக்கு ஆறுதல் கூறியுள்ளார். அதைச் சொல்வதற்கு உங்களைவிடத் தகுதியுள்ளவர் வேறு யார் இருக்கிறார்கள் என்ற வகையில் சுமந்திரனும் அவரைப் பாராட்டியுள்ளார்.

தான் இந்தியாவிற்குச் சென்று வந்த பின்னர் எதிர்கால அரசியல் குறித்து இருவரும் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடலாம் என்று அப்போது ரணில் அழைப்பு விடுத்துள்ளார். டிசெம்பர் முதல் வாரத்தில் இந்தச் சந்திப்பு நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

..................................................

ரணில் இந்தியாவிற்குச் சென்றுவிட்டாலும் அவரது தலைமையில் உருவாக்கப்பட்ட புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் விவகாரம் இன்னும் அடங்கியபாடாகத் தெரியவில்லை. அந்தக் கட்சிக்குக் கிடைத்த 2 தேசியப் பட்டியல் இடங்களில் ஒன்றுக்கு முன்னாள் எரிசக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகரவை நியமிப்பது என்று நேற்று முடிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இருந்தாலும் மற்றொரு இடத்திற்குத் தன்னைத் தானே நியமித்துக்கொண் புதிய ஜனநாயக முன்னணியின் நிறுவுனரான ரவி கருணாநாயக்க தொடர்பில் விசாரணை நடத்த 4 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. வேடிக்கை என்னவென்றால் இந்த சுயாதீன விசாரணைக் குழுவும் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலேயே நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு தனது விசாரணைகளின் முடிவில் ஓர் அறிக்கையைத் வெளியிடும். அதற்கு மேல் என்ன செய்ய முடியும் என்று கேட்டால் எதுவும் இல்லை என்பதுதான் பதில் என்கிறார்கள்.

சட்டப்படி, கட்சியின் செயலாளர் யாருடைய பெயரை தேசியப் பட்டியல் உறுப்பினர் என்று தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கிறாரோ அவரே நாடாளுமன்ற உறுப்பினராவார். அதனடிப்படையில் ரவி கருணாநாயக்கவின் நியமனம் சட்டபூர்வமானது. அதில் தவறு கண்டுபிடிக்க முடியாது. அவரது நியமனம் குறித்து தற்போது எழுந்துள்ள சர்ச்சைகள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அப்பாற்பட்டவிடயம் அதன் தலைவர் ரத்நாயக்கவே தெரிவித்துள்ளார்.

தேசியப்பட்டியல் நியமனத்திற்கான பெயரை உத்தியோகபூர்வமாக சமர்ப்பித்துள்ளமையால் வர்த்தமானியில் வெளியிடும் தனது கடமையை தேர்தல்கள் ஆணைக்குழு செய்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ பட்டியலை கட்சியின் பொதுச்செயலாளர் கையளித்ததும், ஆணைக்குழு அதனை உத்தியோகபூர்வ நடவடிக்கையாகவே கருதும் என்றும் எந்த சூழ்நிலையிலும் வர்த்தமானி அறிவித்தலை இரத்துசெய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆகமொத்தத்தில் ரணிலின் குழு நியமிப்பு, விசாரணை, அறிக்கை எல்லாமே வழக்கம் போல வெறும் கண்துடைப்பு நாடகம் மட்டுமே.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ஒற்றையாட்சித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது புதிய ஆளும்தரப்பின் அடுத்தகட்டச் செயற்பாடுகள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டது. அச்சமயத்தில் நாம் எமது நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தியதோடு கோரிக்கையொன்றையும் முன்வைத்துள்ளோம்.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியா தலையீடுகளைச் செய்ததன் விளைவாகவே இந்திய, இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. குறித்த ஒப்பந்தத்தில் சமஷ்டியை மையப்படுத்திய குணாம்சங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தினை மலினப்படுத்தும் வகையிலும் தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கையை வலுவிழக்கச் செய்யும் வகையிலும்தான் அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

13ஆவது திருத்தச்சட்டம் ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களை வலிந்து திணிப்பதாகும். அதன் காரணத்தினாலேயே நாம் அதனை நிராகரிக்கின்றோம். நாம் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தினை நிராகரிக்கவில்லை. அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இவ்வாறான நிலையில், தற்போது அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப்பெற்றுக்கொண்டுள்ளது. வடக்கு, கிழக்கிலும் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. வழக்கமாகவே ஆளும்தரப்புக்கு ஆதரவாகச் செல்கின்ற வாக்குகளின் அடிப்படையில் அவர்களுக்கு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

மாறாக தமிழ்தேசியத்துக்கு எதிராக மக்கள் வாக்களிக்கவில்லை. அதனை புள்ளிவிபரங்கள் மிகத்தெளிவாகக் காண்பிக்கின்றன. அவ்வாறு பெற்றுக்கொண்ட ஆசனங்களையும் வைத்துக்கொண்டு அநுரகுமார திசாநாயாக்க ஒற்றையாட்சியை மையப்படுத்திய புதியதொரு அரசமைப்பினை உருவாக்கவுள்ளார்.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகள் ஒன்றிணைந்து அதனை எதிர்த்தாலும்கூட, வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள்சக்தியானது தனது பிரதிநித்துவங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு குறித்த ஒற்றையாட்சி அரசமைப்பை வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று உள்நாட்டிலும், உலகத்துக்கும் காண்பிக்கவுள்ளனர். இதற்கு இந்தியா துணைபோய்விடக்கூடாது.

அநுர தலைமையிலான ஆளும்தரப்பின் ஒற்றையாட்சியை மையப்படுத்திய அரசமைப்பை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களை நடுத்தெரிவில் விடுகின்ற செயற்பாட்டிற்கு துணைபோய் வரலாற்றுத் தவறை இழைத்துவிடக்கூடாது என்பதே நாம் முன்வைத்த கோரிக்கையாகும்.

ஆளும்தரப்பு சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வுயோசனையை முன்வைக்கின்றபோது அதனை மையப்படுத்திய பேச்சுக்களில் கலந்துகொள்ளத் தயாராகவே உள்ளோம். எமது தேர்தல் அறிக்கையில் கூறியதைப்போன்று, தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு வரைபை மையப்படுத்தியதாக அந்த கலந்துரையாடல் ஆரம்பமாகினால் அதில் பங்கேற்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். அதேநேரம், பொறுப்புக்கூறல் விடயத்தினை முன்னெடுப்பதற்கு நாம் இந்தச் சந்தர்ப்பத்தினை சரியானதொரு தருணமாகவே பார்க்கின்றோம்.

இந்தியா, இந்த விடயத்தில் நேரடியாக ஈடுபடுவதற்கு நெருக்கடியான நிலைமைகள் காணப்படுமாக இருந்தால் நிச்சயமாக மூன்றாவது தரப்பை மையப்படுத்திய நகர்வுகளை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவது பொருத்தமானதாக இருக்கும். குறிப்பாக, ராஜபக்சக்களும், இனவாதிகளும் தென்னிலங்கையில் பலமிழந்துபோயுள்ள நிலையில், இலங்கையில் இழைக்கப்பட்ட மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுவதற்கு சர்வதேச குற்றவியல் நீதிவிசாரணையை முன்னெடுப்பது அவசியமாகும். அதன் மூலமாகவே நியாயமானதொரு நீதி நிலைநாட்டப்படும்.

தற்போதைய நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏதுநிலைகள் காணப்பட்டாலும் அவற்றை கட்டுறுத்தி அடுத்த கட்டமாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கான எந்தவொரு சூழலும் காணப்படவில்லை. ஆகவே, சாட்சியங்கள் திரட்டப்பட்டு, அதற்கான ஆதாரங்கள் வலுவாக்கப்பட்டு அடுத்தகட்ட விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இந்தியா பகிரங்கமான ஒத்துழைப்புக்களை வெளியிட முடியாது போனாலும்கூட, எதிர்மறையான பிரதிபலிப்புக்களைச் செய்யாது இருக்க வேண்டும் என்றும் கோரியுள்ளோம்.

எமது கருத்துக்களை உயர்ஆணையர் செவிமடுத்தார். நாம்கூறியவற்றை ஆராய்வார் என்றும் தெரிவித்தார்.

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பில் சமரசம் செய்யும் வகையில் அதனைச் செய்யக்கூடாது.

# இன்று காலை 9 மணிக்கு நாடாளுமன்றில் இருங்கள்

## எம்.பிக்களுக்கு செயலாளர் அழைப்பு

10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விற்காக இன்று 9 மணியளவில் வருகை தருமாறு நாடாளுமன்ற செயலாளர் குஷானி ரோஹணதீர அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார்.

காலை 10 மணிக்கு புதிய அமர்வு ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கை விரல் அடையாளத்தை பதிவு செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகை கட்டாயமானது என்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்றைய முதலாவது நாளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக விசேடமான ஆசன ஒதுக்கீடுகள் எதுவும் இருக்காது என்பதுடன் விரும்பிய ஆசனத்தில் அமர்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

செங்கோல் வைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டிய நாள் மற்றும் நேரம் அடங்கிய ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படுவது முதலாவது விடயமாக சபையில் முன்னெடுக்கப்படும்.

அதன் பின்னர் அரசமைப்பின் 64(1) உறுப்புரை மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 04, 05 மற்றும் 06 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபாநாயகரை வாக்களிப்பின் மூலம் நியமித்தல், சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுதியுரை வழங்கப்படும்.

இதனையடுத்து பிரதி சாபாநாயகர், குழுக்களின் தலைவர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்படுவர். நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட் உறுப்பினர்கள் அனைவரும் முதலாவது நாடாளுமன்ற நாள் அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை எனும் புத்தகத்தில் கையொப்பமிடுதல்வேண்டும்.

இதில் சபாநாயகர் முதலில் கையொப்பமிடுவார் என்பதுடன் அடுத்து பிரதமர் கையொப்பமிட்டதும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதில் கையொப்பமிடுவது சம்பிரதாயமாகும். இந்த செயற்பாடுகள் பூர்த்தியடைந்ததும் முதல்நாள் அமர்வுகள் ஒத்திவைக்கப்படுவதுடன் அடுத்த நாடாளுமன்ற அமர்வு நாள் அறிவிக்கப்படும். எனினும் அரசமைப்பின் 33ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதியினால் அன்றையதினம் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரடகன உரை நிகழ்த்தப்படுமாயின், முதல் நாளின் பிரதான பணிகள் நிறைவடைந்ததும் தற்காலிகமாக சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடும்போது ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்குத் தலைமைதாங்கி கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்த முடியும். ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து ஜனாதிபதி நாடாளுமன்றத்தை அடுத்த அமர்வு தினத்துக்கு ஒத்திவைப்பார்.

இதேவேளை, புதிதாக தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த செயலமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம் மற்றும் நாடாளுமன்ற செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

# திட்டமிட்டபடியே உயர்தர பரீட்சை

கல்வி பொதுத் தராதர உயர் தர பரீட்சை திட்டமிட்டபடி நவம்பர் 25 ஆரம்பமாகும் என கல்வியமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு பல்வேறு தரப்பினர் கோரிக்கைகளை முன்வைத்துள்ள போதிலும், இலங்கை பரீட்சைகள் திணைக்களம் கடந்த மார்ச் மாதம் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம், உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஆயத்தப்பணிகளும் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த பரீட்சை நடைபெறும் திகதிகளுக்கு அமைய அடுத்துவரும் சாதாரணதர பரீட்சை உள்ளிட்ட பல பரீட்கைகளுக்கான திகதிகள் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்பட்டால், ஏனைய பரீட்சைகளுக்கான திட்டமிடல் முற்றிலும் ஒழுங்கற்றதாக மாறிவிடும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 ஆண்டுகால பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடிய இலங்கை இன்று ஆயிரக்கணக்கான உயிர்களை காவு கொடுத்தே சுதந்திரத்தை அனுபவிக்கிறது. எனவே வட மாகாணமாக இருந்தாலும் தென் மாகாணமாக இருந்தாலும் தேசிய பாதுகாப்பு பேணப்படுவது மிகவும் முக்கியமானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ஹரீன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரையின்போது தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் சிவப்பு நிற ரீசேர்ட் அணிந்திருப்பதைக் காண்பித்த ஹரீன்பெர்ணான்டோ தான் அணிந்திருந்த டீசேர்ட்டில் எரிவாயு சிலின்டர் படம் இல்லை, பத்தாம் இலக்கம் எனது தேர்தல் போட்டி தொடர்பானதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பழைய அரசியல் வழிமுறைகளை புதிய ஆளும்தரப்பும் பின்பற்றுகின்றது, தனது விடயத்தில் அதிகாரிகள் புதிய சட்டங்களை பின்பற்றுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தேர்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக்காலை கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பிணையில் செல்ல பதுளை நீதவான் நீதிமன்றம் அனுமதித்தது. அவர் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## பார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதுபான வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் இருவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக முன்னாள் அரசுத் தலைவரும் நிதியமைச்சருமான ரணில் விக்ரமசிங்க, முன்னாள் மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி, நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 39 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட ஜூலை 26ஆம் திகதிக்கும், தேர்தல் நடைபெற்ற செப்டெம்பர் 21ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், பிரதிவாதிகள் சட்டவிரோதமாகப் பல மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கினர் என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## சந்தேகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனைவிக்கு வேறு ஒருவருடன் தொடர்பு இருப்பதாக சந்தேகமே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புத்தளம் திலடியா பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான ஜமால்தீன் பாத்திமா சபுனா என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் 27ஆம் திகதி மாவீரர்களுக்கு நினைவேந்தல்

## அநுர அரசு நிச்சயமாக இடமளிக்கும் என மாவீரர் பணிக்குழு நம்பிக்கை.



(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லமான கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் எதிர்வரும் 27 இல் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவிருக்கிறது. அதற்கு ஆளும் அனுர அரசு நிச்சயமாக இடமளிக்கும் என நம்புகிறோம்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக்குழு நடத்திய ஊடக சந்திப்பில் பணிக்குழுவின் தலைவர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

செயலாளர் நாகமணி கிருஷ்ண பிள்ளை( குட்டிமணி மாஸ்டர்) ஆகியோர் இணைந்து தெரிவித்தனர்.

இந்த ஊடகச் சந்திப்பு பாண்டிரு பிலுள்ள சமூக செயற்பாட்டாளர் இரா.பிரகாஸின் இல்லத்தில் அவரது ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது.

கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நடத்துவது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

அம்பாறை மாவட்ட மாவீரர்பணிக்குழுவில் வந்து நாங்கள் 12 உறுப்பினர்கள் இருக்கின்றோம்.

கடந்த காலங்களில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நாங்கள் சிறப்பாக கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் பல தடைகளுக்கு மத்தியில் நடத்தி வந்தோம்.

அந்த வேளையில் சில அரசியல்வாதிகள் அழையாமல் வந்து இந்த நிகழ்வை நாங்கள் தான் செய்கிறோம் என்று தம்பட்டம் அடிப்பார்கள்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து சைக்கிள் காரர்கள் மாவீரர் துயிலும் இல்லத்தை வந்தடைந்து இதனை செய்வார்கள்.

கடந்த வருடம் ஒரு நபரை (பிரபா) வைத்து இந்த மாவீரர் துயிலுமில்ல நினைவேந்தலை குழம்பினர். அதனால் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

27 ஆம் திகதி நினைவேந்தல் செய்வதற்கு சிரமதானம் செய்து ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே இந்த அரசியல் கட்சிகள் வந்து பொய்யான அரசியல் பிரசாரங்கள் செய்வதை முழுமையாக நிறுத்த வேண்டும்.

உங்களுக்கு தெரியும் இந்த கார்த்திகை மாதம் என்றாலே எங்களுக்கு ஞாபகம் வரும் கார்த்திகை 27. இது எக்காலத்திலும் எத்தனை தலைமுறைகள் வந்து போனாலும் எத்தனை மாதங்கள் நாங்கள் கடந்து சென்றாலும் எங்களது நெஞ்சில் ஆறாத வடுவாக எங்களது உள்ளத்தை போட்டு குடைந்து கொண்டு வருத்திக்கொண்டு எங்களை தினம் தினம் எங்களைவேதனைப்படுத்திகொண்டுஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும் விடயம் .எங்களது மாவீரர்கள் புதைக்கப்படவில்லை. விதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எங்களது மண்ணுக்காக - தமிழ் இனத்திற்காக - உங்களது தமிழ் அது வாழ்வியல் மொழி வழி தேசியம் இருப்பு போன்றவற்றை பாதுகாப்பதற்காக ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் எங்களது அண்ணனாக தம்பியாக எங்களது சகோதரிகளாக நாங்கள் இழந்திருக்கின்றோம்.

இந்த மண்ணுக்கு விதையாகி இருக்கின்றார்கள். ஆகவே இந்த மாவீரர் துயில்கின்ற இடத்தில் மாவீரர் நினைவு நாளான கார்த்திகை 27 அண்மையில் வர இருக்கின்றது.

இதனை அம்பாறை மாவட்டத்தில் வழி நடத்துவதற்கும் இதனை சிறப்பாக நடத்துவதற்கும் எங்களது மக்களுக்கு தலைமை தாங்குவதற்கும் மாவீரர் துயிலுமில்ல பணிக்குழு தலைவர் செயலாளர் அதாவது நாங்கள் இருக்கின்றோம். கடந்த ஏழு எட்டு வருடங்களாக செய்கிறோம்.

ஆகவே இந்த மாவீரர் தினமானது ஒவ்வொரு வீடுகளிலும் எங்களது தமிழ் உள்ளங்களிலும் அன்றைய நாள் ஓர் எழுச்சி நாளாக எங்களது உறவுகளுக்கு நாங்கள் ஓர் அனுதாபத்தையோ அஞ்சலியையோ நாங்கள் வீடுகளில் இருந்தாவது செய்ய வேண்டும் .

இந்த வருடமும் நாங்கள் அந்த ஏற்பாடுகளை செய்வதற்கு பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எதிர்வரும் கார்த்திகை 27 அன்று நாங்கள் அந்த புண்ணிய பூமியில் எங்களது தமிழ் இறந்த உறவுகள் எங்களது சரீரத்தின் ஒரு பாகமாக எங்களுக்காக மண்ணில் மடிந்த மாவீரர்களை நாங்கள் நினைவு கூருவதற்கு காத்திருக்கின்றோம். மக்களாக எங்களோடு ஒன்று சேருங்கள். -என்றார்.

# ஐஸ் போதையுடன் ஒரு மாதத்தில் இரு தடவைகள் சந்தேநபர் கைது

### கல்முனையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களை இலக்கு வைத்து ஐஸ் போதைப் பொருள்களை வியாபாரம் செய்து வந்த சந்தேக நபரை இரண்டாவது தடவையாக கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று (புதன்கிழமை) அதிகாலை கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமாக நடமாடிய குறித்த சந்தேக நபரை ஒரு கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் குறித்த சந்தேக நபர் ஏலவே கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் மற்றுமொருவருடன் கல்முனை கடற்கரை பள்ளி வீதியில் வைத்து கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதான சந்தேக நபர் கல்முனை குடி மதிரிஸா வீதியை வசிப்பிடமாக கொண்ட இரண்டு பிள்ளையின் தந்தை என்றும் கடந்த நவம்பர் மாதம் 11 ஆம் திகதி ஐஸ் போதையுடன் ஏலவே அவர் கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்தவர் என விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபரை புதன்கிழமை கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இந்த கைது நடவடிக்கை கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அறநெறி பாடசாலை ஆசிரியர்களால் குகதாசன் எம்.பிக்கு வரவேற்பளிப்பு





(ஹஸ்பர்)

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசனுக்கு 18 அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களால் வரவேற்பு நிகழ்வு ஒன்று மூதூர் சகாயபுறத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்து மன்றத் தலைவர் தவத்திரு. பாஸ்கரன் குருக்கள் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.





18 அறநெறிப் பாடசாலைகளில் பாடம் புகட்டும் 50 இற்;கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன், மேற்படி பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளை கே.எஸ்.குகதாசன் எம்.பி. கேட்டறிந்ததுடன் அவற்றுக்கான தீர்வுகளை மிக விரைவில் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

# மஹிந்த சிறிவர்தன நிதி அமைச்சின் செயலராக பணியை தொடங்கினார்



நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட கே.எம்.மகிந்த சிறிவர்தன நேற்று (புதன்கிழமை) மீண்டும் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெறுவதற்கும், இந்நாட்டில் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் வெற்றிக்கும் அவர் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளார்.

அமெரிக்காவின் வாண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பொருளாதார அபிவிருத்தியில் முதுகலை டிப்ளோமாவையும், களனிப் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

சிறிவர்தன ஒரு சிரேஷ்ட அதிகாரியாவார், அவர் மேக்ரோ பொருளாதார மேலாண்மை, பெரிய பொருளாதார முன்கணிப்பு, நாணயக் கொள்கை, மத்திய வங்கி, பொது நிதி மேலாண்மை, பொதுக் கடன் மேலாண்மை மற்றும் நிதி நிரலாக்கம் மற்றும் கொள்கை ஆகிய துறைகளில் பல சர்வதேச பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

திறைசேரியின் பிரதிச் செயலாளர்கள் மற்றும் நிதி அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வேண்டாம் அணு ஆயுதப் போர்

ரஷ்யா – உக்ரைன் போர் ஓர் அணு ஆயுதப் போராக மாறும் பேராபத்து உலகைச் சூழ்ந்து வருவது கவலையளிக்கிறது. உக்ரைன் மீதான போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்ய அதிபர் புடின் ஒப்புதல் அளித்துள்ளதை அடுத்து இந்தக் கவலை எழுகிறது.

ரஷ்யா – உக்ரைன் போர் தொடங்கி 1,000 நாள்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது தொடர்பான புதிய கொள்கையில் புடின் செவ்வாய்க் கிழமை கையெழுத்திட்டுள்ளார். இது பேராபத்துக்கான அறிகுறி. உலக நாடுகளும் ஐ.நாவும் இதில் உடனடியாகத் தலையிட்டு பேரிடரிலிருந்து இந்த உலகத்தைக் காப்பாற்றவேண்டும்.

அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கியிருந்த நீண்ட தூரம் சென்று இலக்குகளைத் தாக்கக்கூடிய பலஸ்டிக் ஏவுகணைகளைப் பயன்படுத்துவதற்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அனுமதியளித்ததைத் தொடர்ந்து அணு ஆயுதப் பேராபத்து சூழலத் தொடங்கியுள்ளது.

இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப எங்களது அணு ஆயுதக் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வருவது முக்கியம். அணு ஆயுதங்களை தவிர்ப்பதற்கான வழிகளையே நாங்கள் பார்க்கிறோம். ஆனால், அவற்றை பயன்படுத்தவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டால், எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த நேரிடும். அணு ஆயுதம் இல்லாத நாடு அணு ஆயுதம் வைத்திருக்கும் நாட்டுடன் இணைந்து போரில் ஈடுபட்டால் அது கூட்டு தாக்குதலாகவே கருதப்படும்" என்று தெரிவித்தார்.

அவர் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத உதவிகள் வழங்குவதையே குறிப்பிட்டுப் பேசுகின்றார் என்பது வெளிப்படை. மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு உதவுவதை நிறுத்த வேண்டும் என்று புடின் தொடர்ந்து எச்சரித்து வந்தார். எனினும், மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை வழங்கி வந்தன. அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள், தாங்கள் வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணையை பயன்படுத்த உக்ரனைக்கு அனுமதி வழங்கினால், ரஷ்யா மற்றும் நேட்டோ இடையிலான போராக அது மாறும் என்று புடின் ஏற்கனவே எச்சரித்திருந்தார்.

ரஷ்யா – உக்ரைன் இடையில் கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் தொடங்கியது. இந்த போர் தொடங்கி 1,000 நாள்கள் நிறைவடைந்து விட்டன. இந்த நிலையில்தான் பதவி விலகிச் செல்லும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், தனது இறுதிக் காலத்தில் நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில் ரஷ்யாவுக்கு தீவிர பாதிப்பு ஏற்படும். பதிலடியாக ரஷ்யா முரட்டுத்தனமாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் அது ஒரு அணு ஆயுதப் போராக மாற்றமடைவதற்கான சூழல் ஏற்படும். அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடப்பாடு அனைத்து நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் உண்டு. உடனடியாக இல்லையாயினும் மெல்ல மெல்ல என்றாலும் இந்த உலகம் அணு ஆயுதப் போரால் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவது அனைவரதும் கடமை.



# ஆயிரம் நாள்களைக் கடந்த உக்ரைன் போர்

**நாகா**

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து செவ்வாய்க்கிழமையுடன் ஆயிரம் நாள்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்னும் அந்தப் போரின் முடிவுகண்ணுக்கெட்டியதூரம்வரைதெரியவில்லை.

சோவியத் யூனியன் விரிவாக்கத்தைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பு, யூனியன் சிதறுண்ட பிறகும் அதன் முன்னாள் உறுப்பு நாடுகளையும் சேர்த்துக்கொண்டு தங்களை சுற்றிவளைத்து வருவதை ரஷ்யா கடுமையாக எதிர்த்துவருகிறது.



அதிலும் குறிப்பாக, நேட்டோ இராணுவக் கூட்டமைப்பில் அண்டை நாடான உக்ரைன் இணைந்தால் அமெரிக்காவின் ஏவுகணைகள் தங்கள் தலைக்கு நேரே வந்து நிற்கும் என்று கூறிவந்த ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதின், நேட்டோவில் இணைய உக்ரைன் அதிபர் வொலோதீர் ஸெலென்ஸ்கி ஆர்வம் காட்டியதைத் தொடர்ந்து, அந்த நாட்டின் மீது 2022-



ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்தார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பிய பிராந்தியம் அதுவரை கண்டிராத அந்த மிகப் பெரிய போரின் தொடக்கத்தில் ரஷ்யப் படையினர் வேகமாக முன்னேறி கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் லூஹான்ஸ்க், டொனட்ஸ்க், ஸபோரிஷியா, கெர்சான் ஆகிய பிரதேசங்களின் பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றினர். ஆனால், ஆரம்பக் கால விறுவிறுப்புக்குப் பிறகு போர் எல்லைகளில் சொல்லிக்கொள்கிற மாதிரி எந்த நகர்வும் இல்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக போர் முனையின் இரு புறங்களிலும் இருந்தபடி, எதிரிகள் களைப்படையும்வரை நிலைகளை இறுகப்பிடித்திருக்கும் போர் உத்தியை மட்டுமே இரு நாடுகளும் கடைபிடித்துவருகின்றன. ஆனால், இந்தப் போரினால் ஏற்படும் இழப்பு மட்டும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இந்தப் போரில் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் குறித்து இரு நாடுகளுமே நம்பத் தகுந்த புள்ளிவிவரங்களை வெளியிடவில்லை. இருந்தாலும், போரில் இரு தரப்பிலும் சேர்த்து சுமார் 10 லட்சம் பேர் உயிரிழந்திருக்கின்றனர் என்று உளவுத் தகவல்களை மேற்கோள் காட்டி ஊடகங்கள் கூறுகின்றன.

உக்ரைனில் அப்பாவி பொதுமக்கள் மட்டும் 11,743 பேர் கொல்லப்பட்டனர் என்றும் அவர்களில் 589 பேர் குழந்தைகள் எனவும் ஐ.நா.வின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், பல இறப்புக்களை ஐ.நா. உறுதி செய்யாததாலும், ரஷ்ய ஆக்கிரமிப்பில் உள்ள உக்ரைனில் எத்தனை பேர்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஆயிரம் நாள்களைக் கடந்த உக்ரைன் போர்

4ம் பக்கதொடர்ச்சி ...........

கொல்லப்பட்டார்கள் என்ற விவரம் தெரியவராததாலும் இந்த எண்ணிக்கை உண்மையில் இன்னும் பல மடங்காக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இது தவிர, லட்சக்கணக்காவர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு உள்நாட்டிலேயோ, பிற ஐரோப்பிய நாடுகளிலோ தஞ்சமடைய வேண்டிய நிலையை இந்தப் போர் ஏற்படுத்தியுள்ளது. 1,000 நாள்களைக் கடந்தும் இந்தப் பிரச்னைகளுக்கு விடிவுகாலம் பிறக்கிறமாதிரி தெரியவில்லை.

தொடர்ந்து இதே நிலை நீடித்தால், ரஷ்யா, உக்ரைன் ஆகிய இரு நாடுகளுக்குமே அது பேரிழப்பை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.



ஏற்கெனவே, போரில் மடியும் தங்களது வீரர்களுக்குப் பதிலாக புதிய ஆள்களை நியமிக்க முடியாமல் வட கொரியாவிலிருந்து வீரர்களைத் தருவிக்க வேண்டிய நிலைக்கு ரஷ்யா தள்ளப்பட்டுள்ளது.

போரை நடத்துவதற்கு மேற்கத்திய நாடுகளின் நிதி மற்றும் இராணுவ உதவியைப் பெரிதும் நம்பியுள்ள உக்ரைனுக்கு, அத்தகைய உதவிகள் இன்னும் எத்தனை காலம் கிடைக்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. போரில் உக்ரைனுக்கு மிகப் பெரும்பான்மை உதவி அளித்துவரும் அமெரிக்காவின் அடுத்த அதிபராகப் பொறுப்பேற்கவுள்ள டொனால்ட் டிரம்ப், ஆட்சிக்கு வந்ததும் அந்தப் போக்கைத் தொடர்வது சந்தேகமே என்று கூறப்படுகிறது.

எனவே, டிரம்ப் கூறுவதைப் போல் ஆட்சிக்கு வந்த 24 மணி நேரத்தில் உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியாவிட்டாலும், கூடிய விரைவில் அதை முடித்துவைப்பது எல்லா தரப்பினருக்குமே அவசியமான ஒன்று என்கிறார்கள் நிபுணர்கள்.

# கிரிக்கெட் பந்து கண்ணில்பட்ட காயத்தால் கண் பார்வையை நான் இழக்க நேரிட்டது

## விழிப்புலன் இழந்த முதலாவது எம்.பி. தெரிவிப்பு



கண்ணில் சிறிது காயம் ஏற்பட்டால் கூட அதனை அலட்சியம் செய்ய வேண்டாம் என இலங்கை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள முதலாவது விழிப்புலன் இழந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வா தான் கண்பார்வை இழந்த கதையை ஊடகமொன்றுடன் பகிர்ந்துகொண்டுள்ளதுடன், 11 வயதில் கிரிக்கெட் விளையாடும்போது பந்து கண்ணில் பட்டதால் தான் கண்பார்வையை இழந்ததாகத் தெரிவித்துள்ளார்.

பந்தைபிடிப்பதற்குஎனதுகரங்களைபயன்படுத்தாதது என்முதல்தவறு. இரண்டாவதுதவறுஎன்காயங்களை குடும்பத்தவருக்கு மறைத்தது எனத் தெரிவித்துள்ள அவர், இது நான் கண்பார்வை இழக்கும் நிலையை ஏற்படுத்தியது எனக் குறிப்பிட்டுள்ளார்.

உங்கள் கண்ணில் சிறுதூசி விழுந்தால் கூட மருத்துவமனைக்கு செல்லுங்கள் என்பதே எனது அறிவுரை, இந்த காயங்கள் நாங்கள் எதிர்பாராத பாதிப்பை ஏற்படுத்தலாம் என சுகத் வசந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

கண்பார்வை இழந்தவர்களின் வாழ்க்கை மிகவும் சவாலானது; கடினமானது. இவ்வாறான கண்காயங்களை புறக்கணித்தால் மக்களால் அதிலிருந்து மீள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி இவரை தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்டோரை கைதுசெய்யச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல்

தெல்தெனிய பொலிஸ் பிரிவைச் சேர்ந்த திகன, அளுத்வத்தைப் பிரதேசத்தில் சட்ட விரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்டவர்களை கைதுசெய்யச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரு பொலிஸார் காயமடைந்து தெல்தெனியவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதலை மேற்கொண்டவர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.




# வளர்ந்தவர்களுக்கு ஏற்புவலி தடுப்பூசி செலுத்தும் நிகழ்வு



பாடசாலை மாணவர்களுக்கு 'வளர்ந்தவர்களுக்கான ஏப்புவலி டிப்தீரியா ' தடுப்பூசி செலுத்தும் நிகழ்வு கல்முனை கல்வி வலய கல்முனை கமு/கமு/ அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலாஇஸ்ஸதீனின்வழிகாட்டலில், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி இஸட்.சரப்டீனின் ஆலோசனைக்கிணங்க சுகாதார வைத்தியஅதிகாரிகாரியாலயபொது சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், உத்தியோகத்தர்கள் பலரும் இந்த தடுப்பூசி செலுத்தும் வேலைத் திட்டத்தில் இணைந்து கொண்டனர்.

கல்முனை கமு:கமு:அஸ்கர் வித்தியாலய அதிபர் ஏ.எச். அலி அக்பரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றஇந்ததடுப்பூசிசெலுத்தும் நிகழ்வில்மாணவர்கள்,மாணவிகள் தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர்.



# நிந்தவூர் அல்-அஷ்ரக்கின் தேசிய மட்ட சாதனைகள்

(ஸாகிர்)

கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட சேர். ஜோன் ரபட் மெய்வல்லுனர் சம்பியன்சிப் - 2024 விளையாட்டுப் போட்டி மாத்தறை கொடவில விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை சார்பாக கலந்து கொண்ட 12 வயதுப் பிரிவைச் சேர்ந்த முஹம்மட் ஹாரிஸ் முஹம்மத் ஹின்ஸான் ஓட்டப்பந்தயம் 80 மீற்றர் நிகழ்ச்சியில் 11.00 வினாடியில் ஓடி முடித்து 03ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார்.

வெற்றி பெற்ற மாணவரை வாழ்த்துவதோடு,

இவரைப் பயிற்றுவித்த பொறுப்பாசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஆகியோர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்து ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கும் இவரது பெற்றோருக்கும் அஷ்ரக் சமூகம் சார்பாக பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூர் நன்றிகளையும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.







முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்



SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# நல்லூர் லயன்ஸ் கழக சேவைத் திட்டத்துக்கு உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினால் உதவி



நல்லூர் லயன்ஸ் கழகத்தின் சீரிய சேவைத்திட்டங்களைப் பாராட்டிய உரும்பிராய் லயன்ஸ் கழக தலைவரும் லயன்ஸ் கழக ஆளுநர் தெரிவுக்குப் போட்டியிட உள்ளவருமான லயன் மயூரதன் அவர்களின் சேவைத்திட்டத்துக்கு மேலும் ஊக்கமளிக்கும் முகமாக தனது சொந்த நிதியில் இருந்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான சக்கர சாற்காலி ஒன்றை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் உரும்பிராய் லயன்ஸ் கழகத்தை உருவாக்க மூல காரணமாக நல்லூர் லயன்ஸ் கழகத்தில் இருந்து, அதன் தாய் கழகமாக நல்லூர் உருவாகுவதற்கு காரணராக இருந்த லயன் சற்குணதேவனும் கலந்துகொண்டார். லயன் மயூரதனுடன் உரும்பிராய் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் பா.சஞ்சீவனும் கலந்து சிறப்பித்தார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட ஒருவர் காயம்: சந்தேகநபர் கைது

ஹிக்கடுவை பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார் என ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல் சம்பவம் கடந்த ஒக்ரோபர் மாதம் 08ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் ஹிக்கடுவை பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் ஹிக்கடுவை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கலவிட்டகொட பிரதேசத்தில் வசிக்கும் 37 வயதுடையவர் ஆவார். தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹிக்கடுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா – வீரபுரம் ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு: மூவர் கைது

வவுனியா வீரபுரம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியர்கள் செவ்வாய்க்கிழமை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கடந்த வாரம் பாடசாலையில் உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதன்போது இளைஞர் ஒருவர் ஆண் ஆசிரியர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, மாணவி ஒருவரிடம் பேச வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு ஆசிரியர் மறுப்பு தெரிவித்த நிலையில் அதனால் ஏற்பட்ட முரண்பாட்டால் அன்றையதினம் மாலை குறித்த ஆசிரியர் தங்கியிருந்த வீட்டிற்கு சென்றவர்கள் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக திங்கட்கிழமை வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திங்கட்கிழமை மாலை ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் தமக்கு போதிய பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களும் வியாழக்கிழமை சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு முன்னரும் இரு ஆசிரியர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவங்களும் குறித்த பாடசாலையில் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (100)

# ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக வன்னிக்கு மேலும் ஒரு தேசியப் பட்டியல் ஆசனம்



வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக மேலும் ஒரு தேசிய பட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியூதீனின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தரான முஹம்மது இஸ்மாயில் முத்துமுஹம்மது என்பவருக்கே குறித்த தேசியபட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸானது இம்முறை பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டயிட்டுஓர் ஆசனத்தைப் பெற்றுக்கொண்டதுடன், வன்னி உட்பட ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது.

அந்தவகையில் ஐக்கியமக்கள் சக்திக்கு கிடைக்கப்பெற்ற ஐந்து தேசியபட்டியல் ஆசனத்தில் ஒன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்க்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் முக்கியஸ்தருமான முஹம்மது இஸ்மாயில் முத்துமுகமது என்பவருக்கு குறித்த பிரதிநித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இவரது நியமனத்துடன் வன்னிமாவட்டம் 9 நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

# சுவர் இடிந்து வீழ்ந்ததில் கொழும்பில் ஒருவர் சாவு

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பழைய கட்டடம் ஒன்றின் சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பதுளை அராவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுயைடவர் ஆவார்.

இவர் மேலும் சில நபர்களுடன் இணைந்து கட்டடத்தை உடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது கட்டடத்தின் சுவர் ஒன்று இவர் மீது இடிந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கட்டடத்தின் ஒப்பந்தக்காரரின் அலட்சியம் மற்றும் கவனக்குறைவு ஆகியவையே இந்த மரணத்திற்குக் காரணம் என பணியாளர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபரான 24 வயதுடைய கட்டட ஒப்பந்தக்காரர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீடு மீது மண்மேடு சரிந்து பாடசாலை மாணவி சாவு

கண்டி, தெல்தெனிய-தென்னலந்த பகுதியில் உள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 16 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தேசிய பட்டியலின் உறுப்பினராக ரஞ்சித் மத்துமபண்டார நியமனம்

## ஐக்கிய மக்கள் சக்தியால்



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினராக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய தேர்தல் ஆணைக்குழுவால் அவரை நாடாளுமன்ற உறுப்பினராக அறிவித்துவர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் பெற்றுக் கொண்டு வாக்குகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 5 தேசிய பட்டியல் ஆசனங்கள் கிடைத்துள்ளன. அக்கட்சியின் தேசிய பட்டியலில் அதன் தவிசாளர் இம்தியாஸ் பாகீர் மாக்கார், முன்னாள் எம்.பி.க்களான டலஸ் அழகப்பெரும, சுஜீவ சேனசிங்க, ஜீ.எல்.பீரிஸ், சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே ஆகியோரது பெயர்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இவர்களில் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய ஆசனங்களில் இம்தியாஸ் பாகீர் மாக்கார் மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரை நியமிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப் படுகின்றன எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறிருப்பினும் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களை தேசிய பட்டியலில் உள்வாங்கக்கூடாது என்பதை கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சி தலைவர் சஜித்பிரேமதாஸவிடம் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை நியமிக்கப்படுபவர்கள் மூன்றில் இரண்டுக்கும் அதிக பெரும்பான்மை கொண்ட அரசாங்கத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் செயற்படக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதிலும் ஐக்கிய மக்கள் சக்தி அவதானம் செலுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## சந்தேகத்தில்....

### (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஹலவத்தை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மனைவிதீயில்எரிவதைக்கண்டுபொறுக்க முடியாமல் அதை அணைக்கச் சென்ற கணவனுக்கும் தீக்காயங்கள் ஏற்பட்டதால் அவர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீயில் எரிந்த சபுனாவைக் கண்ட அயலவர்கள் தீயை அணைத்து உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு எடுத்து விரைந்தனர். எனினும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## கஞ்சிப்பானை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுற்படுத்தப்பட்டதைஅடுத்தேஇந்தத்தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பருத்தித்துறை பொலிஸாரால் 2024 மே 30 ஹெரோயின் போதைப் பொருளுடன் வடமராட்சியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டு மறுநாள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். அவரை விளக்கமறியல் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

சந்தேகநபர், தான்பாதாளஉலகக்குழுவின் தலைவன் கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகா எனவும், அவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக பிரிந்து பூக்குடி கண்ணாஎன்பவருடன்இணைந்துசெயற்பட்டு வந்ததாகவும், கஞ்சிப்பானை இம்ரானின் தந்தை மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்து யாழ்ப்பாணத்தில் தலைமறைவாகி இருந்தார் எனவும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேற்குறித்த சம்பவங்களின் பின்னணியில் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்ததை அடுத்தே விசேட அதிரடிப்படையினர், பொலிசார் இணைந்து பருத்தித்துறையில் நேற்றுப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். நீதிமன்ற வளாகத்திற்குள்சென்றவர்கள்அத்தனைபேரும் உடல் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டே அனுமதிக்கப்பட்டிருந்தனர். சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு பகல் 12 மணியளவில் அழைத்து வரப்பட்டார்.

வழக்கைவிசாரித்தநீதிவான்கிருஷாந்தன் சந்தேகநபரை டிசெம்பர் 4 வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## 70 ஆயிரம்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய இது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுடன் அடுத்த அமைச்சரவையில்இதற்கானஅமைச்சரவைப் பத்திரமொன்றைசமர்ப்பிக்குமாறு விவசாயம், வர்த்தக அமைச்சர்களிடம் யோசனை முன்வைக்கப்பட்டது.

விவசாய அமைச்சர் கே.டி. லால் காந்த மற்றும் வர்த்தக அமைச்சர் எனும் வகையில் நானும் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் இந்த அமைச்சுகள் இரண்டினதும் அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொண்ட கலந்துரையாடலில், குறுகியகால தீர்வாக சதொச மற்றும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் ஊடாக 70,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதென முடிவெடுத்துள்ளோம். இதில் நாட்டு அரிசிக்கு அதிக முக்கியத்துவம் வழங்க முடிவு செய்துள்ளோம்.

டிசெம்பர் 15ஆம் திகதிக்குள் 70,000 மெற்றிக் தொன் ஸ்வர்ண நாடு அரிசி கிலோ ஒன்று 220 ரூபாவாக சந்தைக்கு வழங்கப்படும். இந்த அளவு அரிசி 15 நாட்களுக்கு மாத்திரமே இறக்குமதி செய்யப்படும்.

இறக்குமதி செய்யப்படும் அரிசி இருப்பு சதொச, கூட்டுறவு மற்றும் பல்பொருள் அங்காடிகள் ஊடாக விநியோகிக்கப்படும். இந்த அரிசியை இறக்குமதி செய்வதற்கு 5,000 மில்லியன் ரூபா அல்லது 500 கோடி ரூபா செலவிடப்படும். தற்போதுள்ள வரிகளின் அடிப்படையிலேயே இந்த அரிசி இறக்குமதியும் நடைமுறைப்படுத்தப்படும்.

கடந்தஇரண்டுவருடங்களில்இலங்கையில் 4.8 மில்லியன் மெற்றிக் தொன் அல்லது 48 இலட்சம்மெற்றிக்தொன்நாட்டுஅரிசிஉற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் மாதாந்த அரிசி நுகர்வு 183,000 மெற்றிக் தொன்களாக இருப்பதால், அரிசி உற்பத்தி உபரியாகவே காணப்படுகின்றது. அப்படியிருந்தும் சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மின்சக்தி ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்திற்கு அவதூறை ஏற்படுத்தும் நோக்கம்பிரதிவாதிகளிடம்இருக்கவில்லைஎன மின்சக்தி – எரிசக்தி அமைச்சின் செயலாளர் மற்றும்மேலதிக செயலாளர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மிலிந்த குணதிலக்க நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இத்தகைய தலையீடுகளால் நீதிமன்றத்திற்கு அவதூறு ஏற்படுவதாகவும் அது நீதிமன்றத்தின் கௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்படுத்துகின்றது என்றும் நீதியரசர்கள் குழாம் சுட்டிக்காட்டியது.

இதன்மூலம் நீதிமன்றத்திற்கு அவதூறு ஏற்படும் என்பதைக் கற்றறிந்த நிர்வாக அதிகாரிகள் அறிந்திருக்கவேண்டும் எனவும் நீதியரசர்கள் குழாம் தெரிவித்துள்ளது.

## தாய் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதி வேண்டும், தவறு செய்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும், வைத்தியசாலை நிர்வாகம் மாற்றப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் குரல் எழுப்பினர்.

போராட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சிலர் வைத்தியசாலைக்குள் நுழைய முற்பட்ட நிலையில் பொலிஸார் அதனைத் தடுத்ததால் குழப்பம் ஏற்பட்டது. இரு தரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை உருவானது. அங்கு உடனடியாகக் கலகம் அடக்கும் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் வரவழைக்கப்பட்டனர். அதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் இறந்த பெண்ணின் பெற்றோரிடம் கலந்துரையாடினர். எனினும் இணக்க நிலை ஏற்படவில்லை.

போராட்டகாரர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் மன்னார் பொது வைத்தியசாலை முன் வீதியையும் மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டத் தொடங்கினர். இந்த நிலையில், மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவின் பிரதிநிதிகள் அடங்கிய அதிகாரிகள் குழு உயிரிழந்த பெண்ணின் தாய் மற்றும் உறவினர்கள், சட்டத்தரணிகள் ,மத தலைவர்களை உள்ளடக்கிய குழுவினருடன் பேச்சு நடத்தினர்.

சுமார் 2 மணி நேரம் நீடித்த இந்தப் பேச்சுக்களில் உயிரிழந்த இளம் தாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது முதல் அவர் உயிரிழக்கும் வரை நிகழ்ந்த சம்பவங்கள் உயிரிழந்த பெண்ணின் தாயார் எடுத்துரைத்தார். தனது பிள்ளை மற்றும் பேரக் குழந்தையின் உயிரிழப்புக்களுக்கு உரிய தீர்வு கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார். அந்தக் கோரிக்கையைஎழுத்துமூலம்சமர்ப்பிக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

அத்தோடு மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால்நியமிக்கப்பட்டகுழுவினரால் இரண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற என்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தனது விசாரணைக் குழுவை நியமித்து மூன்று நாட்களில் அதனை நிறைவு செய்வார் என்றும் அதிகாரிகள் வாக்குறுதி வழங்கினர். விசாரணைகளின் அடிப்படையில்தவறிழைத்தவர்கள் இருப்பின் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாகாண பணிப்பாளர் எழுத்து மூலம் உத்தரவாதம் வழங்கினார்.

அதனை ஏற்றுக் கொண்டு உயிரிழந்த பெண்ணின்தாய், உறவினர்கள்மற்றும்பொது அமைப்பினர் அங்கிருந்து வெளியேறினர். எனினும் இரண்டு அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற வேட்பாளர்கள் அந்த உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றுஅங்குகூடியிருந்தவர்களிடம்தெரிவித்து போராட்டடத்தைத் தொடர வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதனால் அங்கு மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் தர்க்கம் வெடித்து -முறுகல் நிலை ஏற்பட்டது. பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸார் இணைந்து வைத்தியசாலைக்கு முன்பாக வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றினர்.

தேவேளை, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில்குழந்தைப்பேறின்போது போது தாயும் சேயும் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று அறிவித்தார்.

## முல்லைத்தீவு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றுமொருவர் படுகாயமடைந்தார்.

மாங்குளத்திலிருந்து மல்லாவி நோக்கி வந்த மோட்டார் வண்டியும் மல்லாவி பகுதியிலிருந்து மாங்குளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் வண்டியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவத்தில் வன்னிவிளாங்குளம் பகுதியை சேர்ந்த சந்திரன் விதுசன் (வயது 20) புதிய கொலணி மாங்குளம் பகுதியை சேர்ந்த விஜயகுமார் விதுர்சன் (வயது 20) ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்

படுகாயமடைந்த மாங்குளம் பகுதியை சேர்ந்த மற்றைய இளைஞர் மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் நோயாளர் காவுவண்டி மூலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் மாங்குளம்ஆதாரவைத்தியசாலையில்இருந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளன. மேலதிகவிசாரணைகளை மாங்குளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவீரர்களின் பெற்றோர்கள் உருத்திரபுரத்தில் கௌரவிப்பு





கிளிநொச்சி பெரிய பரந்தன் வட்டாரத்திற்கான மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு உருத்திரபுரம் முருகன் ஆலய அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. பெரிய பரந்தன் வட்டார தமிழ் அரசுக் கட்சியின் அமைப்பாளர் யதீஸ்வரன்



தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டிருந்தார்.பெரிய பரந்தன் வட்டாரத்தைச்சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (113)





# தேசிய மக்கள் சக்திக்குச் சவால் விடும் பிரதான அரசியல் கட்சியாக எழுவோம்

## பெரமுன எம்.பி. டி.வி.சானக சவால்



2029 ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் பிரதான அரசியல் கட்சியாக நாங்கள் எழுச்சி பெறுவோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்பிச் சென்று தோல்வியடைந்தவர்கள் எம்முடன் இணைந்துகொள்ளலாம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி. வி சானக தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பகுதியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது –

பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். கடந்த கால அரசாங்கங்கள் மற்றும் ராஜபக்ஷர்கள் தொடர்பிலும் ஜனாதிபதி பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் அதேபோல், குற்றச்சாட்டுக்களை சட்டத்தின் முன் நிரூபிக்கவும் வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை கொண்டு அரசியல் ஸ்திரத்தன்மையை தீர்மானிக்க முடியாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தேசிய பட்டியல் ஆசனத்துடன் நாடாளுமன்றத்துக்கு வந்து ஜனாதிபதியானார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 3 நாடாளுமன்ற ஆசனங்களை வைத்துக் கொண்டு தான் ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் வெற்றி பெற்றார். 3 இலக்கம் அதிஷ்டமானது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மூன்று ஆசனங்களை பெற்றுக் கொண்டுள்ளது.

2029 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் பிரதான அரசியல் கட்சியாக பொதுஜன பெரமுன எழுச்சிப் பெறும். நாட்டின் நலன் கருதி அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவளிப்போம். மக்கள் விடுதலை முன்னணியை போன்று அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் எதிர்க்கும் எதிர்க்கட்சியாக செயற்படப் போவதில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்பிச் சென்று ஏமாற்றமடைந்து அரசியலில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளவர்கள் மீண்டும் எம்முடன் கொள்கை அடிப்படையில் இணைந்து கொள்ளலாம். வெறுப்புக்களை முன்னிலைப்படுத்தி செயற்பட போவதில்லை. – என்றார்.

# நல்லாட்சியை மேம்படுத்தல் செயற்பாடுகளுக்கான மையங்கள் அம்பாறை மாவட்டத்தில் உருவாக்கம்

(அமீர்)

சமூகசெயற்திட்டங்களில்பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஊடாக நல்லாட்சியைமேம்படுத்தல்செயற்பாடுகளை ஊக்குவிக்கும் திட்டம், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, திருக்கோவில், பொத்துவில் மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட சமூக ஆர்வலர்களை இணைத்து அந்தந்த பிரதேசங்களில் நல்லாட்சியை மேம்படுத்தல் செயற்பாடுகளுக்கான மையங்களை ஸ்தாபிப்பது குறித்த கலந்துரையாடல்கள் அண்மையில் நடைபெற்றன.

இந்தத் திட்டத்தின் ஊடாக திண்மக் கழிவகற்றல், கடலரிப்பு, யானை மனித மோதல், நிலநிரப்பு தளத்தால் ஏற்படும் பாதிப்புகள் உட்பட பொதுமக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து, அப்பிரச்சினைகளுக்கு நிலைபேறான தீர்வுகளை வழங்கும் நோக்கில் பொறுப்புவாய்ந்த நிறுவனங்கள் செயற்பட சமூக ஆர்வலர்கள் ஊடான உந்துதல்களை இந்தத் திட்டம் வழங்கி வருகின்றது.

குறித்த பிரச்சினைகள் தொடர்பில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதனூடாகவும் உரிய தீர்வுகளை எட்டும் வகையில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யவும் இத்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படும் நல்லாட்சியை மேம்படுத்தல் செயற்பாடுகளுக்கான மையங்கள் ஊடாகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியில் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா இக்கலந்துரையாடல்களில் வளவாளராக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2024இல் வெளியிடப்பெற்றது